# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1713/15 - 2011 ජූලි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.07.07

*1713/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கம் கொண்ட சிறுகைத்தொழில் அபிவிருத்தி நியதிச் சட்டம்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, மே மாதம் 26 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011, யுன் மாதம் 16 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச்சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

கே. டீ. சிறிசேன,
மாகாண சபைச் செயலாளர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
2011, யுன் 23.

**ஊவா மாகாணத்தின் 2011 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்கம் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி நியதிச் சட்டம்.**

நெடும் பெயர்

ஊவா மாகாணத்திற்குள் செயற்படுகின்ற நெசவுக் கைத்தொழில், சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் போன்றவற்றின் மேற்பார்வை, அபிவிருத்தி மற்றும் மேம்பாடு என்பவற்றைக் கருதியும் அதனுடன் தொடர்புடைய காரணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் பிறப்பிக்கப்படும் நியதிச் சட்டமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தினது மாகாண சபையினால் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படுகிறது.-

சுருக்கப்பெயரும் வலுப்பெறும் திகதியும்.

1. இந் நியதிச் சட்டம் 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கம் கொண்ட, ஊவா மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான நியதிச் சட்டம் என்று அழைக்கப்படுவதுடன், மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்படும் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

2. இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

1. ஊவா மாகாணத்தில் நிலவுகின்ற கைத்தொழில்களை மேலும் அபிவிருத்தி செய்வதும் புதிய கைத்தொழில்களை ஏற்படுத்தியும் அவற்றின் பொருளாதார பயன்பாடுகளை உச்ச அளவிற்கு கொணருவதற்காக ஊவா மாகாணத்தை கைத்தொழில்களுக்கான கவர்ச்சிமிக்க மாகாணமாக மாற்றியமைத்தல்.

2. கைத்தொழில் பிரிவின் பயனுறுதன்மையை அதிகரிக்கச் செய்து தேசியப் பொருளாதாரத்துக்கு செலுத்தும் பங்களிப்பை உயர்த்துவதும், கைத்தொழில் துறையின் ஆளணியினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் உட்பட மாகாணத்தின் தொழிலாளர் எண்ணிக்கையை உயர்த்துவதன் ஊடாக வறுமையை ஒழிப்பதற்காக செய்யப்படுகின்ற பங்களிப்பை உயர்த்துதல்.

3. ஊவா மாகாணத்துக்கே உரித்தான சம்பிரதாயமான கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக முன்னுரிமை வழங்கி, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை புதிதாக ஆரம்பிப்பதற்கும், சிறுகைத்தொழில்களை மேலும் பரவலாக்குவதற்கும் ஊக்குவித்தல்.

4. தற்போது ஏதோ ஒரு மட்டத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற அல்லது ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து நெசவுக் கைத்தொழில், சிறு கைத்தொழில், சிறு பொறியியல் கைத்தொழில், அலங்காரப் பொருட்கள் மற்றும் மென் விளையாட்டுப் பொருட்கள், கலைப் பொருட்கள் உற்பத்தி கைத்தொழில் மற்றும் குடிசை கைத்தொழில்கள் அனைத்தும் மாகாண திணைக்களத்தில் பதிவு செய்து அதற்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்.

5. கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்பாட்டிலுள்ள மர, நெசவு, சிறு பொறியியல், களிமண், தும்பு, ஈர்க்கிள், பிரம்பு சார்ந்த உற்பத்தி நிலையங்களுக்கு பிரதேசத்திலுள்ள தகுதி பெற்ற இளைஞர் யுவதிகளைப் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி தொழிற்பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளை உருவாக்குதல்.

6. காலத்தின் தேவைக்கேற்ப பிரதேசத்தின் தொழிற்பயிற்சித் தேவைகளை இனங்காணல் மற்றும் அத் தொழிற் தேவைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி பாடத்திட்டங்களுக்காக பிரதேசத்தின் இளைஞர் யுவதிகளைச் சேர்த்துக்கொண்டு பல்வேறு துறைகளில் அவர்களுக்கு முறையான பயிற்சி வழங்கள்.

கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்.

3. இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற (இது பின்னர் திணைக்களம் எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த, பொருத்தமான அலுவலர்களை ஊவா மாகாண ஆளுநர் அவர்கள் நியமிக்கக்கூடும் :-

ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளரும், ஆளணியினரும்.

(1) இதன் பின்னர் பணிப்பாளர் என அழைக்கப்படும் ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளர் 3 ஆம் உபவிதியின் கீழ் அமைக்கப்பட்ட திணைக்களத்தின் தலைவராவார். அவர் இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆம் தர உத்தியோகத்தராதல் வேண்டும். ஊவா மாகாண ஆளுநர் அவரை நியமனம் செய்வார். அவருக்கு உதவியாக இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் பிரதிப் பணிப்பாளராகவும், இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் உதவிப் பணிப்பாளராகவும் கௌரவ ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படுவார்கள்.

கைத்தொழில் பணிப்பாளர் தனது அதிகாரத்தைக் கையளித்தல்.

(2) இந் நியதிச் சட்டத்தின் கீழ், கைத்தொழில் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் மற்றும் வேறு எந்த பொறுப்புக்களையும் கைத்தொழில் பிரதிப் பணிப்பாளருக்கு அல்லது உதவிப் பணிப்பாளருக்கு அல்லது வேறு உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளரால் வழங்கப்படலாம்.

(3) திணைக்களத்தின் ஆளணியினரை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு வழங்கல் மற்றும் அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமாக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஊவா மாகாண ஆளுநர், ஊவா மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஆகியோரால் மேற்கொள்ளப்படும் அதிகாரங்களுக்கு ஏற்புடையதாக அமையும்..

அமைச்சரின் அதிகாரங்கள்.

(4) இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கட்டளை பிறப்பிக்க அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

(5) கைத்தொழில் பணிப்பாளரால் விடுக்கப்பட்ட ஏதேனும் ஒரு கட்டளை அல்லது தீர்மானம் சம்பந்தமாக மேன்முறையீடு செய்யப்படாதவிடத்து, இந்த நியதிச் சட்டத்தின் கீழ் செயலாளர் தனது சுய விருப்பின் பேரில் அந்த கட்டளை அல்லது தீர்மானங்களை மாற்றியமைத்தல் சட்டரீதியானதாகும். அவ்வாறான எல்லா சந்தர்ப்பங்களிலும் செயலாளரது தீர்மானம் இறுதியானதாகும். செயலாளரின் அதிகாரங்கள்.

4. இத் திணைக்களத்தின் காரியங்களும், செயற்பாடுகளும் கீழ்க் கண்டவாறு அமையும் :- மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் பொறுப்புகள்.

I. கைத்தொழில் துறைக்குப் பொருத்தமான தொழிற் தேர்ச்சிமிக்க ஊழிய அபிவிருத்தி
II. மிகச்சிறிய, சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழில்களின் அபிவிருத்தி.
III. சம்பிரதாயபூர்வமான கைத்தொழில் அபிவிருத்தி
IV. வீழ்ச்சியுறும் கைத்தொழில்களை மீண்டும் கட்டியெழுப்புதல்.
V. கைத்தொழில் அபிவிருத்திக்குப் பொருத்தமான அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி
VI. கைத்தொழில் துறைக்கு உரிய தொழிநுட்ப அபிவிருத்தி
VII. கைத்தொழில் துறைக்கு உரிய நிறுவன அபிவிருத்தி
VIII. கைத்தொழில் துறைக்குச் சார்பான சட்டதிட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
IX. கைத்தொழில் துறையின் பயனுறு தன்மையின் அபிவிருத்தி
X. தொழிநுட்ப நிதி வசதிகளை வழங்குவதற்கு இடைத் தரகராதல்.
XI. கைத்தொழில் துறைக்கு உரிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
XII. கைத்தொழில் துறைக்குரிய சந்தைகளின் அபிவிருத்தி
XIII கைத்தொழில் துறையில் அரசாங்க - தனியார் இடைத் தொடர்புகள்
XIV. கைத்தொழில் துறையைச் சார்ந்த நிறுவனங்களின் முன்னேற்றம்.
XV. திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் நிலையங்கள் தற்காலத்துக்கு ஏற்புடையதாயும், நோக்கங்களை எய்துவதனை இலகுபடுத்திக்கொள்வதற்காகவும், 'மனிதவள மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிலையம்' (நெசவு/தச்சு/சிறிய/களிமண்/தும்பு - ஈர்க்கில்) என்ற பெயரில் அழைக்கப்படுவதுடன் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

5. இந் நியதிச் சட்டத்தின் கீழ் திணைக்களத்தின் நோக்கங்களை எய்துவதற்காகவும், அதற்கு வழங்கப்பட்டுள்ள காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரங்கள் எழுத்து வடிவிலான சட்டங்களின் எல்லைக்குட்பட திணைக்களத்துக்கு உரித்தாக வேண்டும். திணைக்களத்தின் அதிகாரங்கள்.

6. திணைக்களத்திற்கு இடைக்கிடை ஏற்படும் தேவைக்கேற்ப ஆளணியினரைக் கோருவதற்கு கைத்தொழில் பணிப்பாளருக்கு ஆற்றல் உண்டு. ஆளணியினர்.

7. மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனைச் சபை. மாகாண கைத்தொழில் ஆலோசனைச் சபை.

(1) ஊவா மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 11 அங்கத்தினரைக்கொண்ட மாகாண கைத்தொழில் ஆலோசனைச் சபை ஒன்று அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) இந்த ஆலோசனைச் சபை கீழக்காணும் நபர்களைக் கொண்டு அமையும் :-

I. மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர்.
II. மாகாண கைத்தொழில் பணிப்பாளர்.
III. அமைச்சரினால் நியமிக்கப்படும் கைத்தொழில் துறையில் ஆர்வம் காட்டும் இரு பிரதிநிதிகள்.
IV. தேசிய தொழிற்சபையின் ஊவா மாகாண இணைப்பதிகாரி.
V. ஊவா மாகாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையின் தலைவர்.
VI. பதுளை, மொணராகலை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க தொழிநுட்ப ஆலோசகர்கள் இருவர்.
VII. ஊவா மாகாண தொழில் அதிகார சபையின் தலைவர்.
VIII. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆக்க முயற்சி ஊக்குவிப்புப் பிரிவின் விரிவுரையாளர்களில் ஒருவர்.
IX ஊவா மாகாணத்தில் இயங்கிவரும் வங்கிகளிலிருந்து ஒருவர் வீதம்.

(3) ஊவா மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பதவி வழியாக இவ்வாலோசனை சபையின் தலைவராவார்.

(4) கைத்தொழில் பணிப்பாளர் பதவி வழியாக இவ்வாலோசனை சபையின் செயலாளர் ஆவார்.

(5) அங்கத்தினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

(6) பதவியினின்றும் இராஜினாமா செய்வதன் மூலம், அல்லது இறந்து போவதன் மூலம் அல்லது காலம் முடிவடைவதன் மூலம் அல்லது அமைச்சரினால் பதவி நீக்கம் செய்யப்படுவதன் மூலம் ஓர் அங்கத்தினரின் பதவிக் காலம் முடிவடையும்.

(7) காலம் முடிவடைவதன் மூலம் பதவி இழக்கும் அங்கத்தினர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம்.

(8) சபையின் கூட்டத்திற்கான பெரும்பான்மை எண்ணிக்கை ஏழு ஆகும்.

(9) இவ் ஆலோசனை சபையோடு தொடர்புடையதாக மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திக் குழு, பிரதேச கைத்தொழில் அபிவிருத்திக் குழு மற்றும் நிலையங்களின் கைத்தொழில் அபிவிருத்திக் குழு ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படலாம்.

ஆலோசனைச் சபையின் கடப்பாடுகள்.

(10) குறிப்பிட்ட ஆலோசனை சபையின், ஏற்புடைய விடயப் பொறுப்பான அமைச்சருக்கு மேற்பார்வை சிபார்சுகள், ஆலோசனைகள் என்பவற்றைச் சமர்ப்பித்தல், மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் சேவைகளை மேம்படுத்தல் ஆலோசனைச் சபையின் கடப்பாடுகளாகும்.

(11)ஆலோசனைச் சபை குறைந்தபட்சம் மாதமொரு தடவையாவது கூட்ட வேண்டும்.

மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் பட்டியல்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம்.

8. மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் லஞ்சம் தொடர்பான சட்டத்தின் பொருளுக்கமைய பட்டியல்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாவதுடன் அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் அதன்படியே ஏற்புடையதாக அமையும்.

அலுவலர்களும் ஆளணியினரும் அரசாங்க அலுவலர்கள் என்பது.

9. மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளும் ஆளணியினரும் குற்றவியல் சட்டக்கோவையின் பொருளுக்கமைய மற்றும் அதன் காரியங்களுக்கமைய கடமைபுரிபவர்கள் அரசாங்க அலுவலர்கள் எனக் கருதப்படுவர்.

## பகுதி II

### குற்றங்களும் தண்டனைகளும்

குற்றங்கள்.

10. இந் நியதிச் சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு கட்டளையை அல்லது எற்பாடுகளை மீறுகின்ற அல்லது செயற்படுத்தாது தவிர்க்கின்ற அல்லது [1]இந்த நியதிச்சட்டத்தின் கீழ் யாருக்காவது ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை செய்யவிடாது இடையூறு விளைவிக்கின்ற ஒருவர் இந் நியதிச் [2] சட்டத்தின்கீழ் குற்றவாளியாவார்.

தண்டனைகள்.

11. இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களின் கீழ் நிகழும் அனைத்து குற்றங்கள் தொடர்பிலும் சாதாரண பொதுச் சட்டம் வலுப்பெறுவதுடன், பொது சட்டத்தின் விதிகளுக்கு அமைய குறித்த குற்றத்திற்காக விதிக்கப்படுகின்ற தண்டனை ஏற்புடையதாக அமையும்.

## பகுதி III

### பொது ஏற்பாடுகள்

12. (1) இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முந்திய திகதியில் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக மாகாணத்திற்குள் ஈடுபடுத்தப்பட்டிருந்த அனைத்து நிறுவனங்களுக்கும் உரித்தாக இருந்த உடைமைகளும் சொத்துக்களும் இந் நியதிச் சட்டப்படி மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட உடைமைகள் மற்றும் சொத்துக்கள் எனக் கருதப்பட வேண்டும்.

(2) கீழ்வரும் (3) ஆம் விதியின் கீழன்றி பயிற்சி, விற்பனை சேவை நிலையங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளை வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

(3) பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த வேறு காரியங்களுக்காக இந்த நிறுவனங்களைப் பயன்படுத்தும் தேவை ஏற்படுமிடத்து கைத்தொழில் பணிப்பாளரின் சிபாரிசின் பேரில் செயலாளரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். நிறுவனங்களை வேறு பொதுத் தேவைகளுக்கு பயன்படுத்தல்.

13. (1) நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிறுவனங்களின் பராமரிப்புக்காக தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் செலவழித்தல் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் நியதிகள் ஏற்புடையனவாகும். திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கான நிதியுதவி.

(2) மாகாண திணைக்களத்தின் பிரதான கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான முதலீட்டு மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீடுகள் மாகாண சபையின் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்படும்.

(3) குறித்த விடயங்களை மாகாணத்திற்குள் ஏற்பாடு செய்வதற்காக மத்திய அரசாங்க அமைச்சின் ஒத்துழைப்புடன் இடைக்கால நிதி ஒதுக்கீடு பெறப்பட வேண்டும்.

(4) திணைக்களத்தின் ஊடாக வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் கண்காட்சிகள் ஆடை விற்பனைகள், சந்தைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஈட்டக்கூடிய வருமானங்கள் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

(5) கிராமிய கைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேற்படுத்துகின்ற காரியத்தில் ஈடுபடுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு அரச-சார்பற்ற நிறுவனங்களின் நிதிகள் உரிய துறைகளுக்கெனவே பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(6) உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகளின் ஊடாக இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் பொருளுதவிகளை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் முயற்சி மேற்கொள்ளும்.

(7) எழுத்து மூலமான ஏற்பாடுகளுக்கு உட்பட்ட திணைக்கள நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு மூலகங்களின் மூலம் நிதி மற்றும் பொருள் உதவிகளைப் பெறுவதில் தடைகள் இருக்கவியலாது.

14. நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகும். ஜனவரி 01 முதல் டிசெம்பர் 31 வரை. நிதியாண்டு.

15. மாகாணத்திற்குள், வருடத்தில் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விதம், ஏற்பட்ட முரண்பாடுகள், அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியன அடங்கிய வருடாந்த நிர்வாக அறிக்கை, ஒவ்வொரு ஆண்டும் முடிந்து இரண்டு மாதங்களுக்குள் மாகாண கைத்தொழில் செயலாளரது விதந்துரையுடன், பணிப்பாளரால் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கட்டளை பிறப்பிக்க அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

16. திணைக்களத்தின் அதிகாரங்களை செயற்படுத்துதல் சம்பந்தமாக அமைச்சரினால் திணைக்களத்துக்கு விசேட அல்லது பொதுவான கட்டளைகள் எழுத்து மூலம் பிறப்பிக்கப்படலாம். திணைக்களம் அக் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும்.

17.(1) அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும், அவ்வாறு வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அல்லது குறிப்பிடப்பட்ட பிந்திய திகதியிலிருந்து அது வலுநிலை பெறும்.

(2) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர், அக் கட்டளை வெகு விரைவில் அங்கீகாரத்துக்காக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கீகாரம் பெறாத ஏதேனுமொரு கட்டளை அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட எந்தவொரு ஏற்பாட்டையும் பாதிக்காத வகையில், அது அங்கீகாரம் பெறாத திகதியிலிருந்து திருத்தம் செய்யப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(3) ஏதேனுமொரு கட்டளை அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் திகதி வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டும்.

18. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23 ஆம் உப விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு மேற்கொள்ளப்படும். கணக்காய்வு.

*பொருள் உணர்த்தல்.*

*19. சொற்பிரயோகம் தொடர்பில் வேறு பொருள் தேவைப்படாதவிடத்து. 'அமைச்சர்' என்பது ஊவா மாகாண கைத்தொழில் மற்றும் நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சரையும்,*

*'அமைச்சு செயலாளர்' என்ற பதம் ஊவா மாகாண கைத்தொழில் மற்றும் நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரையும்.*

*'பணிப்பாளர்' என்பது ஊவா மாகாண கைத்தொழில் மற்றும் நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான பணிப்பாளரையும்,*

*'பிரதிப்பணிப்பாளர்' என்பது கைத்தொழில் மற்றும் நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளரையும்.*

*'உதவிப் பணிப்பாளர்' என்பது கைத்தொழில் மற்றும் நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரையும் குறிக்கும்.*

*மொழிகளுக்கிடையில் கருத்து ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல்.*

*20. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் மொழிச் சொற்களில் அல்லது சொற்றொடர்களில் ஏதேனும் கருத்து ஒவ்வாமை காணப்படின், சிங்கள மொழிச் சொல் அல்லது சொற்றொடரே வலுவுடையதாக அமையும்.*

*7-539*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.